நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி
10-1-80 முதல்
1. Radio & Electronic with Practical
2. Advanced & Spoken English
3. சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்)
4. I. B. K., I. A. A.
விபரங்கட்கு:
V. M. பாக்கியநாதன்

பக்கங்கள் 8

# ஈழநாடு
The EELANAADU

50 சதம்

மலர் 21 மார்கழி 26 ஸபர் 21 இதழ் 332
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 10-1-80

RECEIVED
1980-1-10
PERIODICALS DIVISION
LIBRARY

பிளவ்ஸ் கிறீம்ஹவுஸ்
வழங்கும்
16 வயதினிலே
பொங்கலன்று
திறந்த வெளியரங்கில்
● சுழத்து பாலசுப்பிரமணியம்
● சுஜாதா அத்தநாயக்கா,
● சாந்தி கணபதிப்பிள்ளை
பிரவேசம்: 10/- 5/- 3/-
ரிக்கற்:- பூபாலசிங்கம் புத்தகசாலையிலும், நியூ பிளவ்ஸிலும் பெற்றுக் கொள்ளலாம். முந்துங்கள்!

# இந்திரா காந்தி இன்று பிரதமராக பதவி ஏற்பார்!

## கட்சிக்குழு புதுடில்லியில் கூடுகின்றது

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தி இன்றையதினமே இந்தியாவின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றுக்கொள்வார் என்று தெரியவருகின்றது.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழு இன்று பிற்பகல் புதுடில்லியில்கூடி திருமதி காந்தியை அதன் தலைவராகத் தெரிவு செய்யும்.

இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுவின் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது!

இன்று திருமதிகாந்தி கட்சிக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டவுடன் அவரை மந்திரிசபை அமைக்கும்படி ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவ ரெட்டி அழைப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு இந்திரா காங்கிரஸ் பாராளுமன்றக்குழு பாராளுமன்றக் கட்டிடத்தில் கூடுகின்றது.

கடந்த இரவு பத்திரிகை அச்சுக்குப்போகும்வரை வெளிவந்துள்ள 521 தொகுதி முடிவுகளில் 349 தொகுதிகளை இந்திராகாங்கிரஸ் கைப்பற்றிவிட்டதாக அறிவிக்கப்பட்டது.

லோகசபைக்கான 542 உறுப்பினர்களில் 526 உறுப்பினர்களுக்கான தொகுதிகளுக்கே தேர்தல் நடந்தது. இரு உறுப்பினர்களை ஜனாதிபதி நியமிப்பார் அஸ்ஸாமில் 12 இடங்களுக்கும் வேறு சில மாநிலங்களில் சில இடங்களுக்கும் தேர்தல் பின்னர் நடைபெறவிருக்கின்றன.

# ராஜினாமா இல்லை

## எம் ஜி ஆர் அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 9

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக்கழகம் இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்குக் கிடைத்திருக்கும் வெற்றி மத்தியில் நிலையான அரசமைக்க திருமதி இந்திரா காந்திக்கு அளிக்கப்பட்ட திட்டவட்டமான தீர்ப்பாகும். இதனை ஏற்கத்தான் வேண்டுமென்று தமிழ்நாடு முதலமைச்சரும், அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத் தலைவருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் இன்று சென்னையில் நிருபர்களிடம் கூறினர்.

தநியில் ஜனதா லோக்தள் கட்சிகளின் இரண்டரை ஆண்டுகால ஸ்திரமற்ற ஆட்சி இக்கட்சிகளுக்குள்ளிருந்த உட்பூசல் போன்ற தேசிய பிரச்னைகள் திருமதி காந்திக்கு மக்களின் ஆதரவைப் பெற்றுத் தந்ததனவென்று அவர்கூறினர்.

மக்களின் இந்த அதிருப்தி மத்தியஅரசிடமேயன்றிமாநில அரசிடமல்ல. காங்கிரஸுடன் சேர்ந்ததாலேயே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு

(5-ம் பக்கம் பார்க்க)

# வெளிநாட்டுக் கொள்கை மாற்றி அமைக்கப்படும்!

## இந்திரா அறிவிப்பு

புதுடில்லி, ஜன. 9

எனது அரசு பதவிக்கு வந்ததும் இந்தியாவின் பொருளாதார - சமூக வெளிநாட்டுக் கொள்கைகள் உடனடியாக மாற்றியமைக்கப்படும்.

இவ்வாறு இந்திரா காங்கிரஸ் தலைவர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளார்.

தமது இல்லத்தில் தம்மைப் பாராட்டுவதற்காக வந்துகூடி இருந்த மக்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பெரும்பொருளாதாரநெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதே எமது அரசின் தலையாய கடமையாகும், இதற்குப் பொதுமக்கள் தமது ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்.

மக்களின் மேம்பாட்டுக்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயங்கமாட்டேன். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் எமது முக்கிய கடமைகளில் ஒன்ருகும். (இ)

# அ தி மு க ஆட்சியில் மக்களுக்கு சலிப்பு

## கருணாநிதி கூறுகிருர்

சென்னை, ஜன. 9

திருமதி இந்திராகாந்திக்கு கிடைத்துள்ள அமோகவெற்றி இந்தியாவில் ஜனநாயகத்துக்கு ஆபத்து என்ற கூற்றை திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் திரு. மு. கருணாநிதி நிராகரித்துள்ளார்.

மேற்குவங்க மார்க்ஸிய கம்யூனிஸ்ட் முதலமைச்சர் திரு. ஜோதிபாசுவும், கேரள காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. ஏ. கே. அன்ரனியும் இந்திராவின் வெற்றி ஜனநாயகத்துக்கு ஆபத்து என்று கூறியுள்ளனர். இம்மாதிரியான அச்சம்தேவையற்றது என்று திரு. கருணாநிதி கூறினர்,

30 மாதகால கசப்பான ஆட்சியில் மக்கள் சலிப்படைந்ததினல் திருமதி காந்தியை அமோகஆதரவுடன் ஆட்சிக்கு அனுப்பியுள்ளார்கள் என்று திரு. கருணாநிதி கூறினர்,

தமிழ் நாட்டில் சட்டம்

(8ம் பக்கம் பார்க்க)

# நாடுதிரும்பியயாழ்.மேயருக்கு அமோக வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிலிருந்து திரும்பிய யாழ். மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனுக்கு யாழ்ப்பாணம் ரயில்நிலையத்தில் நேற்றுப்பிற்பகல் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

ஆணையாளர் திரு. கே. சிவஞானம், துணைமுதல்வர் திரு. சேவியர் மற்றும் உறுப்பினர்கள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், கூட்டணி ஆதரவாளர்கள்ஆகியோர் ரயில்நிலையத்தில் திரண்டிருந்தனர்.

ரயில் நிலையத்திலிருந்து நகர முதல்வருக்கு மாலைசூட்டி வரவேற்று தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கிருந்து யாழ் மாநகர சபைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

யாழ் மாநகர சபையில் உறுப்பினர்களாலும் ஊழியர்களாலும் வெளிநாட்டிலிருந்து திரும்பிய நகரமுதல்வருக்கு தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. அங்கிருந்து அவரது இல்லத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டார். ஆதரவாளர்கள் கூட்டணி உறுப்பினர்கள் இளைஞர்கள் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர். வழிநெடுகிலும் பூரண கும்பம் வைத்து மலர்மாலைஅணிவித்து மேயரை மக்கள் வரவேற்றனர். (க)

......

# மே. வங்கத்தில் மா. கம். கட்சி அமோக வெற்றி!

மேற்குவங்காளத்தில் வெளியான 41 தொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளில் 27 இடங்களை மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றியுள்ளது. இந்திரா காங்கிரஸ் 4 இடங்களையும், இந்தியகம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களையும், பார்வார்ட் புளக் 3 இடங்களையும், ஆர். எஸ். எஸ். 4 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

# மறியல் செய்தவர்கள் மீது குண்டர்கள் தாக்குதல்!

## அலவிமௌலானவுக்கு கத்திக்குத்து

## பாராளுமன்றத்தில் எம்.பிக்கள் புகார்

(கொழும்பு)

சிறீலங்கா சுதந்திரக்கட்சித் தொழிற்சங்கத் தலைவர் அலவி மௌலானு கத்திக் குத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் இருப்பதாக நேற்று பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணைவிவாதத்தின்போது கொத்மலை எம். பி. திரு. ஆனந்த திஸநாயக்கா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்புப்பிரேரணையின்போது மறியலில் ஈடுபட்ட மத்தியவங்கி ஊழியர்களும் வேறுபலரும் தாக்கப்பட்டதாக புகார் தெரிவித்தனர்.

கொத்மலை எம். பி. பேசுகையில் கொழும்பு துறைமுகத்தில் பண்டாரநாயக்க கேட்டுக்கருகில் மறியலில் ஈடுபட்டிருந்த தொழிற்சங்க ஊழியர்கள்மீது படுமோசமாகத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மறியலில் ஈடுபட்டிருந்தவர்களை 500 பேர் கொண்ட குண்டர்கள் கோஷ்டி ஒன்று தாக்குதல் நடத்தியுள்ளது. திரு அலவி மௌலானு கத்தியால் குத்தப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் இவரது நிலைமை மோசமாயுள்ளது. இவரது மூக்கிலிருந்து இரத்தம் கசிகின்றது. மறியல் செய்வது சட்டவிரோத நடவடிக்கையல்ல. சட்டத்திற்குட்பட்டே ஊழியர்கள் மறியல்போராட்டத்தை நடத்தி

(8ம் பக்கம் பார்க்க)

### ரயில்-மோட்டார்சைக்கிள் மோதல்:

# இரு ஆசிரியர் பரிதாபமரணம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை ரயிலிலிருந்து வந்து கொண்டிருந்த யாழ். தேவியும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த இரு இளம் ஆசிரியர்கள் பலியானார்கள்!

நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் பாதுகாப்பற்ற ரயில்வே கடவையில் இடம்பெற்ற இவ்விபத்தில் பலியான

(5ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் பருத்தித்துறை வீதி, பலாலி வீதிச்சந்தியில், பருத்தித்துறை வீதி முகப்பில் கிணற்றுடன் இரண்டரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு 65 ஆயிரம் ரூபாவுக்கு மேல், தொடர்பு: தர்மபாலன், சீவம், நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7423. (4606)

---

புதிய Honda CD 185 (Roadmaster) விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 103''C'' சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். 4608

---

### தேவை

எமது ஸ்தாபனத்திற்குச் சோடா பெட்டிகள் ஏற்றி இறக்கக்கூடிய கூலியாட்களும் சோடாப் பெட்டி ஏற்றி இறக்கக்கூடிய விற்பனையாளர்களும் தேவை. நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ். 31 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். 4601

---

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் **காணி, அல்லது** நல்ல வீட்டுடன் காணி உடன் தேவை. விபரங்களுக்கு: திருமதி பஸ்தியாம்பிள்ளை ''வசந்தஸ்தான்'' பெரிய விளான், இளவாலை. 4615

---

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் பிரதான வீதிகளுக்கு அருகாமையிலுள்ள குடியிருப்புக் காணி நல்ல வீட்டுடன் அல்லது வீடு இல்லாமலும் தேவை. உடன் பணம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும். இல. 2, மல்லிகா லேன், வெள்ளவத்தை, கொழும்பு-6 4607

---

மில்லில் வேலை செய்பவர்கள் அப்பளம் தயாரிப்பவர்கள், சைக்கிளில் வியாபாரம் செய்பவர்கள், பைக்கற் ஒட்டக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. தேவாஸ் கிறைண்டிங் மில், 67, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4596

---

### பயிற்சி

நாடக, அரங்கக் கல்லூரியால் நடிப்பு, நெறியாள்கை, பிரதியாக்கம், ஒப்பனை, மேடை நிர்வாகம் ஆகிய அனைத்திலும் பயிற்சி அளிக்கப்படும். ஜீ. சீ. ஈ. (உயர்தரம்) பாட நெறிக்கேற்பவும் பயிற்சிகள் அளிக்கப்படும். வகுப்பு ஆரம்பம்: 15- 1- 80. செயலாளர், நாடக, அரங்கக் கல்லூரி, ''தாயகம்'' திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம். 4618

---

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீனமுறையில் வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor) Building Technology, PMG Certificate பயிற்சிகள் 16-1-80 ஆரம்பமாகின்றன. National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். இலவச கையேட்டிற்கு எழுதவும். 4597

---

## பதில்முதல்வர் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

இந்திய இடைத் தேர்தலில் அமோக வெற்றியீட்டிய இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவி திருமதி இந்திரா காந்திக்கும்; தமிழ்நாட்டில் போட்டியிட்டு சகல தொகுதிகளிலும் வெற்றியீட்டிய தி. மு. கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கும் யாழ். மாநகர பதில் முதல்வர் திரு. பி. எஸ். [illegible] யர் பாராட்டுத் [illegible]ந்திகளை அனுப்பியுள்ளார். ( )

---

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

காலஞ்சென்ற மணியர் கந்தையா மயில்வாகனம், கோவளம், காரைநகர் என்பவரினது மரணசாதனத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 3490

எம். கே. மயில்வாகனம் கைம்பெண் கனகம்மா, கோவளம், காரைநகர்.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலேபெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தைஎண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஒப்பம்

பொ. பாக்கியநாதன்,

பதிவாளர்.

வரைதல்:

ஒப்பம்

செ. மகேசன்,

மனுதாரின் சட்டத்தரணி.

1979-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 27-ந் நாள்.

4616

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்விப் பத்திர அறிவித்தல்

1980-ம் ஆண்டுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரசவ விடுதிகளின் அழுக்குத்துணிகளைச் சலவை செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 17-1-80-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் அன்றையதினம் பிற்பகல் 3-00 மணிக்குத் திறக்கப்படும். விரும்பிய கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்கலாம்.

கேள்விப் பத்திரங்கள் 16-1-80-ந்திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரையும் ரூபா50-00 வைப்புப் பணமாகவும்,ரூபா5-00கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

இதன்கீழ் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும் நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,

மாநகர ஆணையாளர்,

யாழ்ப்பாணம்.

சுகாதாரப் பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
7-1-80. 4612

---

## இடமாற்றம்

(புலோலி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் வேலணை உதவி அரசாங்க அதிபராகவும் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்து கரவெட்டி உதவி அரசாங்க அதிபராகவும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

---

## கேள்வி விண்ணப்பம்

### இன்ரநாஷனல் 24 ஸ்ரீ 3508 லொறி பொடி அடித்தல்

மேற்படி லொறிக்கு திருத்தி அமைக்கப்பட்ட பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் லொறியைப் பார்வையிட்டு, சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை ரூபா 2/-கொடுத்து 80-01-15ம் திகதிக்கு முன் பெற்று 80-01-25ம் திகதிக்கு முன்னர் ''பொதுமுகாமையாளர், வலி-கிழக்கு, தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு சீலிட்ட தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பொடி அடித்தல்'' எனக் குறித்து விண்ணப்பிக்கலாம்.

**பொதுமுகாமையாளர்**

வலி-கிழக்கு தென்பகுதி
ப. நோ. கூ. சங்கம்,
நீர்வேலி,
1980-01-08. 4613

---

## 91 திட்டங்களுக்கு அங்கீகாரம்

(கொழும்பு)

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் 91 திட்டங்களை மேற்கொள்வதற்கு இருபத்தைந்து நாடுகளிலிருந்து கிடைத்த விண்ணப்பங்களுக்கு கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு அங்கிகாரம் வழங்கியுள்ளது.

சுமார் 6,000 பேர் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர். (வெ)

......

## கூட்டணி வெற்றி

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை தேசிய கடதாசி கூட்டுத்தாபன ஊழியர் தேர்தலில்தமிழர்விடுதலைக் கூட்டணி ஆதரவிலான ஊழியர்கள் பலத்த போட்டியின் மத்தியில் அமோக வெற்றி பெற்றனர்.

பதினெட்டு உறுப்பினர்களுக்கான தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணி ஐக்கிய தேசியகட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி லங்கா சமசமாஜ கட்சி கம்யூனிஸ்ட்கட்சி ஆகிய அரசியல் கட்சிகளின் ஆதரவில் வேட்பாளர்கள் போட்டியிட்டனர் தமிழர் விடுதலைக் கூட்டணி பதினொரு ஸ்தானங்களையும் ஐக்கியதேசியக் கட்சி இரண்டு ஸ்தானங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி இருஸ்தானங்களையும் கைப்பற்றியது.

......

## பரு-திருமலை பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

(புலோலி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவினுல் நடத்தப்பட்டு, கடந்த பல மாதங்களாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை-திருகோணமலை பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது,

அதிகாலை 4-45 க்கு பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து திருகோணமலைக்குச் செல்லும் இந்த பஸ் சேவை, கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக [illegible] இ. போ. ச. [illegible] றிஸ்கந்தராசா தெரிவித்தார். (அ)

---

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

### ஆட்டிறைச்சிக் கடைகள், மாட்டிறைச்சிக் கடைகள், கோழிக் கடைகள் ஆகியவற்றுக்கான

# குத்தகை - 1980/1981

01. கீழே விபரிக்கப்படும் பண்ணை முற்றவெளிச் சந்தை, நாவாந்துறை இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள் ஆகியவற்றை 01-02-1980 முதல் 31-12-1981 வரையிலான காலத்திற்கும், சின்னக்கடை இறைச்சிக்கடைகள் 01-02-1980 முதல் 31-12-1980 வரையிலான காலத்திற்கும் குத்தகையில் கொடுப்பதற்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 24-01-1980-ந் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கேள்விகள் மாநகராட்சி மன்றஅலுவலகத்தில் அதற்கென விதிக்கப்பட்ட கட்டணங்களைச் செலுத்துவதன் பேரில் மன்றத்தினுல் வழங்கப்படும் பத்திரங்களின் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்குமுத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் மூலம் ''ஆணையாளர்'',மாநகராட்சி மன்றஅலுவலகம்,யாழ்ப்பாணம்'' என விலாசமிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். அல்லது மாநகராட்சிமன்றஅலுவலகத்தில் அதற்கெனவைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்வியைஉள்ளடக்கிய கடித உறையின்இடது பக்க மேல்மூலையில் கேள்விக்கான இறைச்சிக்கடையின்/கோழிக்கடையின் விபரம் தெளிவான முறையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

03. கேள்விப்பத்திரங்கள் 23-01-1980-ந் திகதி புதன் கிழமை பிற்பகல் 3-00 மணி வரை வழங்கப்படும். ஒவ்வொரு கடைக்கும் தனித்தனியான கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்,

### குத்தகை விபரம்

1. பண்ணை, முற்றவெளிச் சந்தை

ஆட்டிறைச்சிக்கடைகள் இல. 01 தொடக்கம் 11 வரை
கோழிக்கடைகள் இல. 01 தொடக்கம் 03 வரை

2. சின்னக்கடை சந்தை

ஆட்டிறைச்சிக்கடை இல. 01 மட்டும்
மாட்டிறைச்சிக்கடைகள் இல. 02 தொடக்கம் 07 வரை

3. நாவாந்துறை சந்தை

மாட்டிறைச்சிக் கடைகள் இல. 01 தொடக்கம் 07 வரை

4. பாஷையூர் சந்தை

மாட்டிறைச்சிக்கடை இல. 03 மட்டும்

மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்.

மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
08-01-1980. 4614

---

## இந்திரா காந்தியின் வெற்றி

### ''1980'' உங்களுக்கு எப்படி?

அறியஆவலா? உடனே வாங்குங்கள் சோதிடமலர்

படித்தறியுங்கள் உங்கள் காலபலன்

**திருமதி இந்திரா காந்தியின் வெற்றி**

**இலங்கைத் தேர்தல், மாதாந்த பலன்கள்**

முதலிய பல விடயங்களை முன் கூட்டியே தெரிவிப்பவர்

**Dr. பண்டிட் K. N. நவரத்தினம்**

A. F. A.

இதோ 18-10-1979 சோதிடமலரில் வெளிவந்த செய்தி

### இந்தியத் தேர்தல்

எதிர்வரும் இந்தியப் பொதுத் தேர்தலில் இந்திராகாந்தியே தெரிவு செய்யப்படுவார். இவருக்கு லக்னத்தில் இருக்கும் சனி மகாதசை மிகவும் சிறப்பான நற்பலனைக் கொடுக்கும். தற்போது சுக்கிர புத்தி நடைபெறுகின்றது. இவர் குருவுடன் பரிவர்த்தன ராஜ யோகம் பெற்று 6-ம இடத்தில சஞ்சரிப்பதால இத்தேர்தலில் வெற்றிகாண்பார்.

கோசாரப் பலன்களின்படி 4-11-79-ல் மாற்றமடையும் சனி சூரியனின் நட்சத்திரத்தில் தேர்தல காலத்தில் சந்திரன் சூரியன் வியாழன் ஆகிய கோள்களுக்கு நற்பார்வையில் சஞ்சரிப்பதால் மிக நல்ல பலன்களைக் கொடுக்கும். குருபகவான் இவரின் ஐந்தாதிபதி பத்தாதிபதியாகிய செவ்வாய்க்கு மேல தேர்தல் காலத்தில் சஞ்சாரம் செயவதும இந்தியாவின் சுதந்திர சாதகத்தில் குரு சூரிய ராசியில் சஞ்சாரம் செய்வதும் இவரது வெற்றியை ஊர்ஜிதப்படுத்துகின்றது Dr K.N.

வெளிவந்துவிட்டது

நட்சத்திர ரீதியாக ''Your Fortunes in 1980''

ஆங்கிலத்தில்

divined by Pundit K. N. Navaratnam A. F. A.

விலை ரூபா 6-50

ஏகவிநியோகஸ்தர்கள்:

ரகுநாதன் பதிப்பகம்

இல. 3, நியூ மார்க்கெட், யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7678. (4617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைக்கண்டத்தின் தனிப்பெரும் தலைவி திருமதி இந்திராதான்

## இடைத்தேர்தல் அளித்த அங்கீகாரம்

## மக்கள் கருத்து

### உணவு முத்திரையும் மக்கள் பிரச்னைகளும்

அரசின் புதிய நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட உணவு முத்திரைகள் மக்களுக்கு ஒரு சிறிதளவு நன்மைகளைக் கொடுத்திருந்தாலும், அதிகாரிகளின் கவலையீனத்தால் அந்த நன்மைகள்கூட பலருக்குக் கிடைக்காதிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட அறிவித்தலுடன் கூடிய விநியோகமாக இந்த விநியோகம் நடைபெற்றிருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுகளுக்கும் ஒவ்வொரு தேதிகளைக் குறிப்பிட்டு விசாரணைகள் சகலவற்றையும் பூர்த்தி பண்ணியிருத்தல்வேண்டும். அந்த நடைமுறைகள் கிராம சேவகர்கள் மூலமாக அறிவித்தல்மூலம் நடைபெற்றாலும் அதில் தவறப்பட்டவர்கள் முத்திரை பெறத் தகுதியற்றவர்கள் என கிராமசேவகர்கள் மூலமாகக் கணிக்கப்பட்டவர்கள்; போதிய விபரங்கள் கொடுக்கப்படாததால் கிராம சேவகர்களினுடைய சிபார்சுகளைப் பெறமுடியாதவர்கள், மற்றும் பிற காரணங்களினால் (நோய், இடமாற்றம்) உள்ள டக்கப்பட்டவர்கள் யாவரையும் உரிய தேதிகள் இட்டு, மிகக் கூடுதல் முயற்சி எடுத்து விசாரணைகளை விரைவில் நடத்தி முடிவு எடுத்திருத்தல் வேண்டும். மாத முடிவாகவும் வருட முடிவாகவும் கடந்த மாதம் முடிந்தமையினால் வேலைப்பளுக்கள் கூடுதலாக இருந்தாலும் கூட மக்களுக்கு அரசால் வழங்கப்பட்டிருக்கும் உணவு மானியத் திட்டத்திற்குத் தடையாகச் செயல்படாதவிடத்து நிதானமாக நடந்திருத்தல் வேண்டும். அதற்கு அதிகாரிகள் யாவரும் உரிய நேரத்தில் வந்து லீவுகள் எடுக்காமல் செயல்பட்டிருக்கவேண்டும். வேலைப்பளுக்கள் கூடிய காலங்களில் கடமையுணர்ச்சியுள்ளவர்களாக இருந்திருப்பின் அந்தமாதிரி விடுமுறைகள் எடுத்திருக்கமாட்டார்கள். ஒரு அதிகாரியிடம் மக்கள் தங்களது உணவு முத்திரை கடைக்கு வரவில்லையென்று முறைப்பாடு கொடுக்குமிடத்து சரியான ஒரு விடையை அந்த முத்திரையைப் பெற முடியாமல் அங்கே வந்து கேட்டவருக்கு வழங்கியிருத்தல்வேண்டும். அதை விடுத்து உணவு முத்திரைக்குரிய உமது பத்திரத்தைக் காணவில்லை; கண்டிக்கு அனுப்பியிருக்கிறது சில வேளை மாறிப்போயிருக்கும் என்ற விடைகளையும் அதை அடுத்த கட்ட விநியோகத்திற்காதல் நாங்கள் தர முயற்சி செய்கின்றோம் என்றவிதமான மக்களுக்கு நம்பிக்கையற்ற விடைகளைக் கொடுத்தல் கூடாது. மக்களால் நிரப்பப்பட்ட படிவங்கள் அலுவலகத்தில் கட்டாயம் இருத்தல் வேண்டும். வேறு வெளியில் சென்றிருந்தால் அது எங்கே போயிருக்கும் என்பதனைத் தெரிந்திருக்காமல் அங்குள்ள அதிகாரிகள் இருக்க முடியாது. அப்படியிருப்பின் அவர்கள் கடமையுணர்ச்சியற்றவர்கள். இவர்கள் போன்றவர்களின் செயல்களினால் பாதிப்படைவது அவர்களல்ல; அப்பாவி மக்களே.

**பிரச்னைகள்:-**

மார்கழி மாதம் முடிவுற்றதால் மார்கழி மாதம் பாவனைக்கு ஆரம்பமான உணவு முத்திரைகள் பெறத் தகுதியிருந்தும் அதனை இன்னும் பெறாமல் அலைகின்ற மக்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கு ஒழுங்கான பதில்களைக் கொடுக்காமல் இன்று வா; வந்த பின்பு மேலதிகாரி வரவில்லை; நாளை வா என்றவாறு பதில்கள் அளிப்பது நடைமுறைக்கு ஒவ்வாததும் மக்களுக்குச் சேவை செய்கின்ற கடமைகளிலிருந்து தவறுதல்படுவதுமானதாகும். இதனால் பாதிப்புற்ற மக்களினுடைய கடந்த மாத உணவு மான்யத்திற்குரிய நஷ்டஈட்டை மேற்குறிப்பிட்ட அதிகாரிகள் வழங்குவார்களா? அந்த அதிகாரிகள் கடமையுணர்வற்றதன்மையினால் இவ்வளவு பாதிப்புக்களையும் மக்கள் அனுபவிக்கவேண்டியுள்ளது. இதை அவர்கள் தவிர்த்து சிறந்த முறையில் சேவையாற்ற திடசங்கற்பம் பூணுவார்களாக.

**மா. சின்னத்தம்பி.**
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

---

''எதிரிக்குச் சகுனப்பிழை ஏற்படவேண்டும் என்பதற்காக தன்மூக்கைஅறுத்தவன்'' கதையாகிவிட்டது, இந்திய காபந்துப் பிரதமர் திரு. சரண்சிங் அவர்களின் அரசியல் நடவடிக்கைகள். இந்தியத் தேர்தல் இதனையே தெரிவு படுத்துகின்றது.

**மிகப்பெரிய அரசியற் கோமாளி**

இந்த நூற்றுண்டின் மிகப் பெரிய அரசியற் கோமாளி திரு. ராஜ் நாராயணை தமது தளபதியாகப் பாவித்து சரண்சிங் ஆடிய நாடகங்கள் அவருக்கு மூன்றுமாத காபந்துப் பிரதமர் பதவியை மட்டுமே சட்டிக் கொடுத்தது. ஐந்தாண்டிற்கான துணைப்பிரதமர் பதவியையும், உள்துறை அமைச்சர் பதவியையும் சரண்சிங் இழந்தார். அவர் தளபதி ராஜ் நாராண் கையிலிருந்து நலத்துறை அமைச்சர்பதவியை என்றோ கோட்டைவிட்டார். இறுதியில் இவர்கள் படுதோல்வியைத் தவிர சரண்சிங் தன் தொகுதியில் வெற்றிபெற்றிருக்கலாம். வேறு எதையுமே அறுவடை செய்ய அரசியல் ரீதியாக அவர்களால் இயலவில்லை.

மேலும் ஒரு காலம் அரசியல் பங்காளிகளான மொரார்ஜி தேசாய், ஜகஜீவன் ராம் போன்ற பெருமை பெற்ற அரசியல் வாதிகளுக்கும் இவர்களுக்கும் இவர்கள் தோல்வியை தங்கள் செலவில் பெற்றுக்கொடுத்ததுடன், இவர்கள் அனைவருக்கும் பொது எதிரியான இந்திரா காந்தியையும் அரசு கட்டிலில் ஏற்றிவைத்துள்ளார்கள். அது மட்டுமன்றி விரும்பியோ விரும்பாமலோ போலத்தான் லோக்தள்ளுடன் உறவு வைத்த அர்ஸின் ''காங்கிரஸ் (யூ) எம். ஜி. ஆரின் ''அ. இ.அ. தி. மு. க.''வை. பி. சவான் (உத்தியோக பூர்வ காங்கிரஸ்)மற்றும் சில உதிரி அரசியல் கட்சிகளின் அரசியல்எதிர்காலத்தை சரண்சிங் - ராஜ் நாராயண் கோமாளி அரசியல் மங்கச் செய்துவிட்டது.

1977 இந்திய பொதுத்தேர்தல் முடிவை அடுத்து அரசியல் அவதானிகள் இரண்டு கருத்தை வெளியிட்டிருந்தனர். ஒன்று, ஜனதா ஆட்சி நீடித்து நிலைப்பது கடினம். மற்றது) ஜனதா அரசு ஐந்து ஆண்டுகள் பாரத துணைக் கண்டத்தில் நிலைத்தால் 1982இல் நிலையான ஆட்சி ஏற்படுவது கடினம். அரசியல் அவதானிகளின் முதற்கருத்து என்றோஉண்மையாகிவிட்டது. ஜனதாவும்ஜனதாவில் இருந்து பிரிந்த லோக் தள்ளும் குறைப் பிரசவங்கள் என்பதும் நிலை நிலைநிறுத்தப்பட்டு விட்டது. அதே நேரத்தில் திருமதி இந்திரா காந்தி தான் இருபதாம் நூற்றுண்டின் சாணக்கியன் என்பதை மீண்டும் நிரூபித்துவிட்டார்.

1969-ம் ஆண்டு பழம்பெரும் காங்கிரஸ் தலைவர்களை இரண்டாம் கட்ட தலைவர்களின் துணையுடன் மண்கவ்வச்செய்தார் திருமதி காந்தி காமராஜ், அத்சல்யா கோஷ் போன்ற பெரும் தலைவர்களை மண்கவ்வச் செய்ததுடன், பிளவுபடாத காங்கிரஸ் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான நீலம் சஞ்சீவிரெட்டியவ எதிர்க்கட்சிகளின் வேட்பாளரானகிரி அவர்களுக்கு தனித்து நின்று ஆதரவு கொடுத்து ஜனாதிபதியாக்கினார். இதனை அடுத்து நடைபெற்றபொதுத் தேர்தலில் காமராஜ், தேசாய், கோஷ் போன்றவர்கள் தோல்வியடைந்தனர். 1970இல் இந்திரா காந்தி தனிப்பெரும் தலைவியாக அங்கீகரிக்கப் பட்டுள்ளார்.

**இ. சங்கர்**

1977 தேர்தல் இந்திராகாந்தியின் அவசரகால அக்கிரமங்களின் பிரதிபலிப்பாக அமைந்தது. மக்கள் நிம்மதிப் பெருமூச்சுவிடுவதற்காக இந்திரா காந்தியின் எதிர் அணியை ஆதரித்தார்கள். இது ஒரு தற்காலிக செயலாகவே அமைந்தது.

**அரசியற்பாடம் கற்பித்துவிட்டார்**

1969-ல் பழம் பெரும் தலைவர்களைத் தட்டிக் கேட்பதற்கு இரண்டாம் சட்டத் தலைவர்களின் துணையைப் பெற்ற திருமதி காந்தி இப்பொழுது அவர்கட்கும் அரசியற்பாடம் போதித்துவிட்டார். இந்த வகையில் ஜகஜீவன்ராம், வை. பி. சவான், அர்ஸ் போன்றவர்கள் குறிப்பிடவேண்டியவர்கள் ஆவர்.

அவசரகாலச் சட்ட விதிகள் கடுமையாக அமுல் நடாத்தப்பட்ட டில்லி பிரதேசத்தில் ஒரு தொகுதியைத் தவிர ஏனைய தொகுதிகளில் திருமதி காந்தியின் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. தோல்வியுற்ற தொகுதியில் வெற்றி பெற்றவர் அட்டல் பிகாரி வாஜ்பாய் இவர் ஜனசங்கின் இந்து தீவிர வாதிகளின் செல்லப்பிள்ளை தோல்வியுற்றவர், திருமதி காந்தியின் செல்லப்பிள்ளை, கலைக்கப்பட்ட லோசக்பாவில் இந்திர காங்கிரஸின் பாராளுமன்ற குழுத்தலைவர் சி. ஸ்டீபன் ஆவர்.

1970-ம் ஆண்டு தேர்தலில் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் பிராந்திய கட்சிகளின் செல்வாக்கு பெருமளவு குறைந்தது. 1977 தேர்தலில் பிராந்திய கட்சிகள் மேலும் பாதிக்கப்பட்டன. நடந்து முடிந்த தேர்தலிலும் தமிழ்நாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பிராந்திய கட்சிகளின் குரல்வளை நெரிக்கப்பட்டுள்ளது. 'அகாளித்தளம்' ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

நடந்து முடிந்த தேர்தலின் விளைவு இந்திய அரசியலில் சில புதிய மரபுகளை தோற்றுவித்துவிடலாமோ என்ற ஓர் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இன்றைய ஜனாதிபதி நீலம் சஞ்சீவி ரெட்டி அவர்கள் 1969-ம் ஆண்டு ஜனாதிபதி தேதலில் போட்டியிட்டு தோல்வி அடைந்தவர் என்பது தெரிந்ததே. அதே பொழுதில் அண்மைய அரசியலில் திரு. ரெட்டி அவர்களின் செயல்கள் பல [illegible] காரியது. இத்தகைய அரசியற் பகைப் புலன்களைகொண்டு நோக்குகையில் இன்றைய ஜனாதிபதி அவர்கள் மீது புதிய பாராளுமன்றத்தில் (லோக் சபை) நம்பிக்கையின்மை பிரேரணை கொண்டு வரப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்திய அரசியல் சட்டத்தின் பிரகாரம் லோக்சபாவில் இரண்டு மூன்று பெரும்பான்மைமூலம் பதவியில் இருக்கும் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யலாம். இந்திரா காங்கிரஸ்மட்டுமல்ல ராம் அவர்களின் ஜனதாவும் இத்தகைய ஒரு முயற்சியை முழுமையாக ஆதரிக்கும். இந்திரா காங்கிரஸ் கூட்டாளிக் கட்சிகளான தி. மு. க. முஸ்லிம் லீக்போன்றவற்றின் ஆதரவும் இத்தகைய முயற்சிக்கு உண்டு

நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தல் மீண்டும் திருமதி இந்திரா காந்தியை பாரத துணைக் கண்டத்தின் தனிப் பெரும் தலைவியாக அங்கீகரித்து உள்ளது. புதிய மரபுகளைத் தோற்றுவித்து தன் தலைமைக்கு அம்மையார் மீண்டும் பரீட்சை நடாத்தமாட்டார் என நம்புவோம்.

......

### கல்முனை அபிவிருத்தி

(கல்முனை)

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப். ஏ.ஆர். மன்சூர் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளைத்தொடர்ந்து கல் முனைப் பகுதியின் அபிவிருத்தி முயற்சிகள் மிகவும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

புதிய செயலகம் நிறுவுதல் கலாச்சார நிலையம் அமைத்தல் வீடமைப்பு திட்டங்களமைத்தல். நவீனமார்க்கட் கட்டுதல் போன்ற திட்டங்களுக்கான ஆரம்ப வேலைகள் தற்போது நடைபெற்றுவருகின்றன. (நிஸ்)

### தனியார் பாடசாலைகள்

(கொழும்பு)

கல்வியமைச்சின் உதவியைப் பெறும் 25தனியார் பாடசாலைகளும் இனிமேல் தமது பாடசாலைகளில் ஆசிரியர் நியமனத்தைச் செய்ய வேண்டுமானால் கல்வி அமைச்சிலிருந்து அதற்கான அனுமதியைப் பெற வேண்டுமெனகல் வியமைச்சின் தனியார் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் திரு. ஜீ. ஏ. டபிள்யு.டி, அல்விஸ் தெரிவித்தார்.

......

### விருந்துபசாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை உறுப்பினர்களான திருவாளர்கள் எஸ்.தியாகராஜாவுக்கும் ஆ துரைராஜாசிங்கத்திற்கும் முத்தமிழ்வெளியீட்டுக் கழகம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் யாழ்.மத்தியகல்லூரி மண்டபத்தில்தேநீர் விருந்தளித்துக் கௌரவிக்கவிருக்கிறது.

---

## நாடும் நடப்பும்

இந்தியாவில் இந்திரா மீண்டும் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று ஆட்சிபீடத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். அரசியலிலிருந்தே இந்திராவை ஒழித்துக்கட்டுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளெல்லாவற்றையும் முறியடித்து இந்திராதான் இந்தியா என்ற நிலையை மீண்டும் ஏற்படுத்தியிருப்பது உலக நாடுகளில் ஆச்சரியத்தை ஏற்படுத்தாமலிருக்க முடியுமா?

1977ம் ஆண்டில் இந்தியப் பொதுத்தேர்தலில் இந்திராவும் அவரது கட்சியும் இந்திராவின் மகனும் தோல்வியடைந்த போது அதே இலங்கையில் நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி திருமதி சிறிமாவுக்கும் சுதந்திரக்கட்சிக்குமெதிராகப்பயன் படுத்தியது. 1977ம் ஆண்டுப்பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி படுதோல்வி அடைந்தாலும் திருமதி சிறிமாவும் அவரது மகன் அநுராபண்டாரநாயகாவும் தேர்தலில் தோல்வியடையவில்லை.

இப்போது இந்தியத் தேர்தலில் இந்திரா அமோக வெற்றி பெற்றுள்ளதைவைத்து கொழும்பு நகரிலும் மற்றும் பலஇடங்களிலும் சுவரொட்டிகள் வெளிப்பட்டிருக்கின்றன ''இன்று இந்தியாவில் நாளை இலங்கையில்'' என்பதுதான் சுவரொட்டிகளிலுள்ள கலோகம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் தான் இச்சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளனர்.

இதுபற்றி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அரசாங்கக்கட்சிக் கூட்டத்தில் நேற்று முன்தினம் குறிப்பிடுகையில், 1977ம் ஆண்டில் இலங்கையில் நடந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி எப்படி அமோக வெற்றியீட்டியதோ அதே நிலைதான் இன்று இந்தியாவில் இந்திரா காங்கிரசுக்குக் கிடைத்திருக்கிறது'' என்று கூறி ''நேற்று இலங்கையில் இன்று இந்தியாவில்'' என்றுதான் இதைச் சொல்லவேண்டுமென்றாராம்.

எப்படியானாலும் இந்தியாவில் நடப்பதும் இலங்கையில் நடப்பதும் இருநாடுகளுக்கிடையிலும் தாக்கத்தை ஏற்படுத்துமென்பது உண்மையே!

ஃ ஃ ஃ

பருத்தித்துறை பீச்றோட்டைச்சேர்ந்த சேர்ந்த செல்வி கே. வத்சலா நியூஸிலாந்து நாட்டில் உள்ள பேனு நண்பி ஒருவரின் முகவரியை எமக்கு அனுப்பி அதை வாசகர்கள் பயன்பெறும்வகையில் 'நாடும் நடப்பும்' பகுதியில் பிரசுரிக்குமாறு கேட்டுள்ளார்.

அவர் அனுப்பியுள்ளமுகவரி இதுதான்:

Mrs. Anne Eagles,
14, Hunter Crescent,
Twizel S. I.
Newzealand.

செல்வி வத்சலா எமக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''திருமதி ஆன் ஈகிள்ஸ். சித்திரம் மற்றும் கலைகளில் ஆர்வம் கொண்டவர் இவரைப் போன்ற ஆர்வமுள்ளவர்கள் இவருடன் தொடர்பு கொள்ளும்போது நியூஸிலாந்து-இலங்கை கலைப் பொருட்கள், சித்திரங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். இவருடன் தொடர்பு கொள்ளவிரும்புபவர்கள் ஆங்கில மொழியில் எழுதவேண்டும்.

(4ம் கலம் பார்க்க)

(5ம் கலத் தொடர்ச்சி)

நியூஸிலாந்தில் உள்ள தமது நெருங்கியநண்பியான திருமதி பௌலாவின் நண்பியே திருமதி ஆன் என்றும் தமக்கு சித்திரக்கலையில் ஆர்வமில்லாதபடியினாலேயே தாம் இம் முகவரியை சித்திரக்கலையில் ஆர்வமுள்ளவர்களுக்காக எமக்கு அனுப்பியுள்ளதாகவும் செல்வி வத்சலா எழுதியுள்ளார்.

**- ஊர்சுற்றி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றுக்குநூறு வெற்றிபெற்ற தி.மு.க வை விட

## அ தி மு க வுக்கு 4 லட்சம் அதிகவாக்கு

(சென்னை)

இந்திய லோகசபைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு நூற்றுக்கு நூறு வெற்றி கிடைத்துள்ளபோதிலும் தி.மு.கவைவிட அ. தி.மு.க வேட்பாளர்களுக்கே அதிக வாக்குகள் கிடைத்துள்ளன.

தி. மு.க. வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளைவிட 3 லட்சத்து 81 ஆயிரத்து 998 வாக்குகள் கூடுதலாக அ.தி.மு.க வேட்பாளர்களுக்குக் கிடைத்துள்ளன,

தமிழ்நாட்டில் உள்ள மொத்தம் 39 லோகசபைத் தொகுதிகளில் 16 இடங்களில் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழகம் 16 தொகுதிகளையுமே கைப்பற்றிய போதிலும் அதற்கு 43 லட்சத்து 69 ஆயிரத்து 708 வாக்குகள் மட்டுமே கிடைத்தன,

24 தொகுதிகளில் போட்டியிட்டு 2 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெறமுடிந்த அ. தி. மு.க.வுக்கு 47 லட்சத்து 51 ஆயிரத்து 701 வாக்குகள் கிடைத்துள்ளன.

22 தொகுதிகளில் போட்டியிட்டு 20 தொகுதிகளைக் கைப்பற்றிய இத்திராகாங்கிரஸ் கட்சிக்கு 40 லட்சத்து 18 ஆயிரத்து 344 வாக்குகள் கிடைத்தன, (இ)

## இந்திரா இல்லத்துக்கு ஆதரவாளர் படையெடுப்பு

(புதுடில்லி)

திருமதி இந்திரா காந்தியின் மகத்தான வெற்றி குறித்து நேரில் பாராட்டுத் தெரிவிக்கும் பொருட்டு அவரின் புதுடில்லி இல்லத்திற்கு பெருந்திரளான மக்கள் சாரிசாரியாக வந்து குவிந்த வந்த வண்ணம் இருக்கின்றனர்.

பாராட்டுத் தெரிவிக்கவரும் மக்கள் மலர் மாலைகளுடனும் பூச்செண்டுகளுடனும் வருகின்றனர் என்றும் அநேகமானோர் திருமதி காந்தியின் தந்தைக்குப் பிரியமான ரோஜா மலர்களையும் மாலைகளையும் கொண்டு வந்து திருமதி காந்திக்கு அணிவிக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் திருமதி காந்திக்கு வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் பெருந்தொகையான வாழ்த்துக்களும் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. (இ)

## மிருகவியல் நிபுணரை சிங்கம் தாக்கவில்லை!

### கொலை செய்யப்பட்டாராம்

நைரோபி, ஜன.9

சிங்கம்தாக்கி மரணமடைந்ததாகக் கூறப்படும் மிருகவியல் நிபுணர் ஜொய் அடாம்சன் (69 வயது) கொலை செய்யப்பட்டுள்ளார் என்றும் சிங்கம் தாக்கி அவர் மரணமடையவில்லை என்றும் இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கொலை சம்பந்தமாக கென்யாவைச் சேர்ந்த இவரின் முன்னாள் ஊழியர்கள் மூவர் கென்யா பொலிசாரினால் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை நைரோபியில் நடைபெற்ற இவரின் மாணவிசாரணையின் போது இவர் சிங்கம் தாக்கி மரணமடையவில்லை என்பது தெரியவந்தது. இவருடைய தோள்களில் காயங்கள் இருந்தாகவும், ஆனால் அவை சிங்கத்தின் நகத்தினால் ஏற்பட்ட காயங்களல்லவெனவும் தெரிய வந்துள்ளது.

இந்தவகையில் இவருடைய மரணம் சம்பவித்ததை கேட்டுத் தாம் அதிர்ச்சியடைந்ததாக உலக வனபரிபாலன பகுதிப் பணிப்பாளர் திரு. மங்க்ஸ் தெரிவித்துள்ளார்.

திருமதி அடாம்சனின் மரணம் சம்பந்தமாக குறிப்பிடத்தக்க தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், இதுபற்றி பூரணவிசாரணை நடைபெற்று வருவதாகவும் கென்யா ஜனாதிபதி திரு. டானில் அரப் மொய் கூறினார்.

ஆஸ்திரியாவைச் சேர்ந்த திருமதி அடாம்சன் தனது 27 வயதில் கென்யா வந்தார். தனது மூன்றாவது கணவனாக இவர் 1946ம் ஆண்டில் ஜோர்ஜ் என்பவரை விவாகம் செய்தார். இவர்கள் இருவரும் தமது வாழ்க்கையை வனபரிபாலனத்துறைக்கு அர்ப்பணித்துச் சேவையாற்றி வந்தனர்.

திருமதி அடம்சனின் வனவிலங்குகள் பற்றிய படங்களும், புத்தகங்களும், ஓவியங்களும் அவரைக் கோடிக் கணக்கான உலக மக்களுடன் இணைக்கும் சாதனங்களாக விளங்கி வருகின்றன. (வெ)

## ஆப்கானில் ரஷ்யதலையீடு இந்திரா கண்டனம்

புதுடில்லி, ஜன 9

ஆப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் தலையீடு குறித்து இந்திரா காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை சகல நாடுகளாலும் கண்டிக்கப்பட வேண்டும் என்றும் திருமதி காந்தி தெரிவித்துள்ளார். (இ)

## இவ்வருடத்தில் மேலும் ஆயிரம் பஸ்கள்!

[கொழும்பு]

இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, உலக வங்கியின் உதவியுடன் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் அபிவிருத்தித்திட்டங்களை அதிகளவில் மேற்கொள்ளவுள்ளது. இதன்பிரகாரம் மேலும் 3,000 பஸ் வண்டிகளைச் சேவையிலீடுபடுத்தவும் அது தீர்மானித்துள்ளது.

நான்கு மாகாண வேலைத்தளங்களும் முப்பது புதிய டிப்போக்களும் இத்திட்டத்தின்கீழ் அமைக்கப்படும்.

இந்தவருடம் 1,000 புதிய பஸ்களை இறக்குமதி செய்வதற்கான ஒழுங்குகளையும் இச்சபை செய்துள்ளது. (வெ)

## "கலைஞர்கள் பிரதேசரீதியாக கௌரவிக்கப்படுவார்கள்"

### நாடகவில் அமைச்சர் 'இராசு'

(மட்டக்களப்பு)

"பிரதேச ரீதியாக நாடகக் கலைஞர்கள் வளரவேண்டுமென்ற எண்ணத்தில்தான், அரசாங்கம் பிரதேச அடிப்படையில் நாடகவிழாக்களை நடத்துகின்றது" என்று இலங்கை கலாச்சார பேரவையின் தமிழ் நாடக ஆலோசனை குழுவின் முதல் நாள் விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட நீதி அமைச்சர் திரு கே. டபிள்யூதேவநாயகம் குறிப்பிட்டார். மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. டிக்சன் நிலவீரவினால் மங்கள விளக்கேற்றிஆரம்பிக்கப்பட்ட இவ்விழாவில் நீதி அமைச்சர் தவேநாயகம் மேலும் பேசுகையில்கூறியதாவது:-

நாட்டுக் கூத்துக்கு புகழ் பெற்ற மட்டுமாநகரில் இவ் விழா நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன். மட்டக்களப்பின் பாரம்பரிய கலையாக விளங்கும் நாட்டுக் கூத்துக் கலையை நாம் ஒரு போதும் அழிய விடாமல் பாதுகாக்கவேண்டும். இதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்குமுகமாக இவ்வருடம் அக்டோபரில் வந்தாறுமூலையில் நிறுவப்படுகின்றபல்கலைக் கழகத்தில் நாட்டுக் கூத்துப் பிரிவு ஒன்றை புதிதாக ஏற்படுத்தி உள்ளோம்" என்றார்.

திருமலை மதிஒளி கலைக்கழகத்தின் "காதலே நீ வாழி" களுதாவளை இளைஞர் மன்றத்தினரின் "ஜானகி கல்யாணம்" என்பன மேடையேற்றப்பட்டன.

இரண்டாம் நாள் விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்துகொண்டபிராந்தியஅபிவிருத்தி தமிழ் மொழி அமுலாக்கல் இந்துக் கலாச்சார அமைச்சர் திரு. செல்லையா இராசதுரை உரையாற்றுகையில் கூறியதாவது:-

"எதிர்காலத்தில் கலைஞர்களுக்கு புத்துயிர் அளிக்க பல திட்டங்கள் தீட்டியுள்ளோம். நாட்டின் பல பாகங்களிலும் இத்தவகைய நாடகவிழாக்கள் நடாத்தப்பட்டு பிரதேச நீதியாக கலைஞர்கள் கௌரவிக்கப்படுகின்றார்கள். இக்கலை விழா நடைபெறுகின்ற திரையரங்கின் குறைபாடுகளை நான் அறிவேன். இவ் அரங்கு உடனடியாக புனரமைப்பு செய்யப்பட்டு புத்துயிரும் புதுப் பொலிவும் பெற இதற்கான நிதியை நான் ஒதுக்கீடு செய்ய உள்ளேன். கலைஞர்கள் எச்சந்தர்ப்பத்திலும் கலையை வளர்க்கப் பின்நிற்கக்கூடாது' என்றார்.

இரண்டாம் நாள் மட்டுநகர் கே. ஓ, வி. கே. குருநாதனின் "ஒரு மலர் கருகியது" திருமலை கலைவட்டத்தின் "உன் கண்ணில் நீர் வடிந்தால்" என்ற இரு நாடகங்களும் மேடையேறின.

## பெர்னாண்டஸ் வெற்றி

[புதுடில்லி]

ஜனதா கட்சி அரசில் தகவல் தொடர்பு அமைச்சராக இருந்து பின்னர் பிரிந்து சென்று லோக்தாள் வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் வெற்றிபெற்றுள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் திரு. அசோக் சென், முன்னாள் சபாநாயகர் திரு. பலிராம் பகத் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ளனர்.

லோக்தள் பொதுக்காரியதரிசி திரு. மதுலிமாயி தோற்கடிக்கப்பட்டார். [இ]

......

## இரத்னயக்கா முத்திரை

[கண்டி]

முன்னாள் செனட்டர் ஏ. இரத்னயகா ஞாபகார்த்த விசேட முத்திரை வெளியிடப் பட்டது.

கட்டுகஸ்தோட்டையில் நடைபெற்ற இம்முத்திரை வெளியீட்டு வைபவத்தில், தபால், தந்தி தொடர்புகள் அமைச்சர் திரு. பி. விஜயதுங்க, 'பிரதி பாதுகாப்பு அமைச்சர் திரு. பி. வேரப்பிட்டிய ஆகியோர் கலந்துகொண்டு, அமரர் இரத்னயக்கா நாட்டுக்கு ஆற்றிய சேவையைப் பராட்டிப் பேசினர். இவ்விசேட முத்திரையின் பெறுமதி ஒரு ரூபா 25 சதமாகும். [வெ]




சங்கானைக் கொலை:

## 3-வது சந்தேகநபரும் பிணையில் விடப்பட்டார்

[மாவிட்டபுரம்]

சங்கானைக்கொலை குறித்து றிமாண்டிலிருந்த 3 வது சந்தேக நபரும் 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சங்கானையைச் சேர்ந்த நாகன் சரவணை என்பவரைக் கத்தியால் குத்தியும், கல்லால் தாக்கியும் கொலைசெய்ததாக முருகன வேலாயுதம், முருகன் சடையன், முருகன் கணேசன் ஆகிய மூவர் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சமயம் றிமாண்டில் வைக்கப்பட்டு பின்னர் இருவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டு ஒருவர் மட்டும் தொடர்ந்து றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

முருகன் கணேசன் என்பவர் மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்செய்யப்பட்ட சமயம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தக் குமாரசாமி அவரை 2500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார். (அ)

### அ. தி. மு. க. சென்னையில் கூடுகிறது

(சென்னை)

லோகசபைத் தேர்தலில் அடைந்துள்ள படுதோல்வி குறித்து ஆராயும்பொருட்டு அ. தி. மு.க.செயற்குழுஇன்று சென்னையில் கூடுகிறது.

### யாருடையது

புளியங்கூடலைச் சேர்ந்த என். பாலசிங்கத்தினால் யாழ். சிவன்கோவிலுக்கு அண்மையில் சண்டெடுக்கப்பட்ட தஸ்தாவேஜுகள், அடங்கிய 'என்வலப்' ஒன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரம்பகம் கொலை வழக்கு

# அன்னபூரணம் வயிற்றில் ஆறுமாதச் சிசு இருந்தது

## குடல் வெளியில் வந்திருந்தது

### டாக்டர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

கொலையுண்ட அன்னபூரணத்தின் வயிற்றில் 6 மாத பெண் சிசு இருந்தது. அவரது வயிற்றில் ஏற்பட்ட காயங்களினால் குடல் வெளியில் வந்திருந்தது. இறப்பதற்கு முன் அவர் தாம்பத்திய உறவு இருந்த அறிகுறி காணப்பட்டது. எவ்வித எதிர்ப்பும் காட்டப்பட்ட அடையாளம் இருக்கவில்லை. அவரின் சம்மதத்துடனேயே தாம்பந்திய உறவு நடந்திருக்கிறது.

கரம்பகம் அன்னபூரணம் கொலைவழக்கில் சாட்சியமளித்த டாக்டர் வி. ஏ. மகேந்திரா மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 76 மார்ச் 8-ம் தேதி மிருசுவிலைச் சேர்ந்த கரம்பகத்தில் 21 வயதான கந்தையா அன்னபூரணத்தின் உடமையிலிருந்த ஆபரணங்களை கொள்ளையடித்ததாகவும் அதே இடத்தில் அதே நேரத்தில் இக்குற்றம் புரியும் போது அன்னபூரணத்தின் உடலிலிருந்த ஆபரணங்களைக் கொள்ளையடித்ததாகவும் சின்னையா செல்வநாயகம் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் சட்டத்தரணி செல்வி ரேணுகா இராசரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கை நடத்தினார்.

விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்திற்கு அநேகர் வந்திருந்தனர்.

### டாக்டர் சாட்சியம்

டாக்டர் மகேந்திரா சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: சம்பவம் நடந்த போது நான் சாவகச்சேரியில் கடமையாற்றினேன் அன்னபூரணத்தின் உடலை பிரேத பரிசோதனை செய்தேன் அவருக்கு 21 வயது நல்ல திடகாத்திரமுள்ளவர்.

கழுத்து முன்பக்கத்தில் வெட்டுக்காயமிருந்தது குரல் வளை வெட்டப்பட்டிருந்தது. தலைக்கும் மூளைக்கும் ரத்தம் போகிற திரும்பிவருகின்ற நாடியும் சாப்பாடு போகிற குழாயும் வெட்டப்பட்டிருந்தன.

### 7 குத்துக்காயங்கள்

கழுத்தில் வலது பக்கத்தில் ஒன்றன்பின் ஒன்றாக 7 குத்துக் காயங்கள் இருந்தன. கழுத்து இடது பக்கத்தில் 4 குத்துக் காயங்கள் இருந்தன. கழுத்தின் பின்பக்கம் 3 காயம் இருந்தது. அதில் ஒரு காயம் 1 அங்குல நீளமும், மற்ற காயம் ஒன்றரை அங்குல நீளமும் பின் பக்க வெட்டுக்காயம் அரை அங்குல நீளமும் இருந்தன.

ஐந்தாவது காயம் 4 வெட்டுக்காயங்கள் அரை அங்குலத்தில் காணப்பட்டன ஆறுவது காயம் 3 அங்குல குத்துக் காயமாக வயற்றின் மேல் பக்கத்தில் காணப்பட்டது.

ஏழாவது காயமாக 3 குத்துக்காயங்கள் அரை அங்குலத்தில் மார்பின் இடதுபக்கத்தில் காணப்பட்டது,

### குடல் வெளியில் வந்திருந்தது

எட்டாவது காயம் 2 அங்குல அகலத்தில் குத்துக் காயமாக இருந்தது. பொக்குளு கருகில் காணப்பட்டது குடல் வெளியில் வந்திருந்தது.

ஒன்பதாவது குத்துக்காயம் 2 அங்குல அகலத்தில் இருந்தது. இதிலும் குடல் வெளியில் வந்திருந்தது.

### பத்தாவது காயம்

பத்தாவது காயம் 3 அங்குல அகலத்தில் குத்துக்காயம் வலது நாரியில் காணப்பட்டது. குடல் வெளியில் வந்திருந்தது.

### கத்தியினால் ஏற்பட்டது

இக்காயங்கள் கூரிய ஆயுதத்தினால் கத்தி போன்றதனால் ஏற்பட்டது.

காயம் ஏற்பட்ட சிலநிமிடத்திற்குள்ளேயே மரணமாகியிருப்பார்.

இங்கு காணப்பட்ட வில்லுக்கத்தியினால் வெளிக்காயங் ஏற்பட்டிருக்கலாம்.

### குளறியிருக்க முடியாது

கத்திக்குத்து நடந்த பின் கழுத்தில் ஏற்பட்ட முதல் காயம் முதலில் ஏற்பட்டிருந்தால் அவரால் குளறியிருக்க முடியாது. சத்தம் போடும் சக்தி இருந்திருக்காது.

இரத்தப்பெருக்கினால் கழுத்தில் ஏற்பட்ட முதல் காயத்தினால் அன்னபூரணம் இறந்தார்.

சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: ஏராளமான காயங்கள் ஏற்பட்டதாகக் கூறினீர்?

பதில்: ஆம்.

கே: முதலாவது காயம் கழுத்தில்?

ப: ஆம்.

கே: இதன்பின் கழுத்தில் மார்பில் வயிற்றில் காயம் காணப்பட்டது.

ப; ஆம்.

இறந்தவர் இறப்பதற்குமுன் தாம்பத்திய உறவு கொண்டிருக்கிறார். அவரின் சம்மதத்துடனேயே இதுநடந்துள்ளது. எதிர்ப்பு காட்டப்பட்ட அறிகுறிகள் காணப்படவில்லை. எதிர்ப்புக் காட்டியதற்கான அடையாளம் உடலில் எந்தப் பாகத்திலும் காணப்படவில்லை

காயமடைந்து இறப்பதற்கு முன் தாம்பத்திய உறவு இருந்திருக்க வேண்டும். எவ்வளவு நேரத்திற்கு முன் என்று நிச்சயமாகக் கூற முடியாது. அதிக நேரம் சென்றிருக்கமாட்டாது.

பிரேத பரிசோதனையின் போது அன்னபூரணம் கருத்தரித்திருந்ததை அவதானித்தேன். 6 மாத பெண் சிசு வயிற்றில் காணப்பட்டது.

காயம் ஏற்படுவதற்கு முன் தான் தாம்பத்திய உறவில் இருந்திருக்கிறார். காயம் ஏற்பட்டதற்கு பிறகு தாம்பத்திய உறவு இருந்திருக்க ஏலாது. ஏனெனில், காயம் ஏற்படுத்தியவர் அந்த நேரத்தில், பயத்தினால் பீடிக்கப்பட்டிருப்பார். அச்சமயம், காயம் ஏற்படுத்தியவருக்குத்தாம்பத்திய உறவு கொள்ளாவண்டுமென்ற எண்ணமே இருக்க முடியாது அவரது உடல் அவயவம் பயத்தின் காரணமாக இயங்காமல் இருந்திருக்கும்.

### கிருமிநாசினி நெடி வீசியது

இறந்தவரின் வாயிலும் மூக்கிலும், கிருமிநாசினி நெடி வீசியது. உள்ளுக்கு குடித்த அறிகுறிகள் காணப்படவில்லை. உள்ளுறுப்புக்களில் கிருமிநாசினி காணப்படவில்லை.

நான் பிரேத பரிசோதனை செய்யுமுன் 8 முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருப்பார் 8-ம் தேதி இரவு 10 மணிக்கு இறந்திருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

கே: முதல் காயத்திற்கும் கடைசி காயத்திற்கும் எவ்வளவு நேரம் ஏற்பட்டிருக்கும்.

ப: ஒரு மணி நேரம்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

---

கொழும்புத்துறை ப. நோ. கூ. சங்க

# கொள்ளை வழக்கில் எதிரிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை ப. நோ, கூ. சங்கக்கொள்ளை வழக்கில் இரு எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு பாழ்ப்பாணம் மேலதிக நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 79 ஏப்ரல் 11ம் திகதி கொழும்புத்துறை ப. நோ. கூ.சங்கத்தில் கழல் துப்பாக்கி, கிறிஸ் கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களைக் காட்டிப் பயமுறுத்தி கொழும்புத்துறை ப.நோ.கூ. சங்கத்தில் 2484 ரூபா 46 சதத்தைக் கொள்ளையடித்தது தாக என். எம். ராஜசேகர், என். மகாதேவா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதலாம் எதிரிசார்பில் சட்டத்தரணிகள் கே. வி,நவரத்தினம், இராசகாரியர் ஆஜரானார்கள், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜிம்து ராசரத்தினம், ஆஜரானார்.

யாழ். மேலதிக நீதவான் திரு: கே. எஸ். மகேசன் நேற்றுக் காலை எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்து இம்மாதம் 18ம் தேதி காரணம் அறிவிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

(க-அ)

---

# அரசஊழியர்கள் இன்று கல்விக்கந்தோரில் மறியல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க ஊழியரின் லீவுகளை 21 நாட்களாகக் குறைத்ததை ஆட்சேபித்து, இடைவேளைகளின்போது மறியல் செய்வதென யாழ்ப்பாணத்தில் கூடிய 5 தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் முடிவு செய்தனர்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ். கிளை சார்பில் திரு. வி. பொன்னம்பலம், எழுதுவினைஞர் சங்க யாழ். கிளை சார்பில் திரு. நமசிவாயம், இலங்கை ஆசிரியர் சங்க சார்பில் திரு. கணேசன், பொதுச் சேவைத் தொழிலாளர் சங்க சார்பில் திரு. கிருஷ்ணன், ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்க சார்பில் திரு. குமாரசாமி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்கச் செயலாளர் திரு. வி. எஸ். கனகரத்தினம் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நேற்று நண்பகல் 12 மணிக்கு ஊழியர்கள், யாழ். கச்சேரியில் மறியல் செய்தனர்.

இன்று நண்பகல் யாழ். கல்விக் கந்தோர் வாசலில் மறியல் இயக்கத்தை நடத்துவார்கள். நாளை யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்னால், கூட்டுறவு இலாகா வாசலில் மறியல் செய்வார்கள்.

(க-அ)

# கச்சேரி மறியலில் 200 ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

21 நாளாக லீவுகளை குறைத்ததை ஆட்சேபித்து நேற்று நண்பகல் யாழ் கச்சேரி வாசலில் சுலோக அட்டைகளுடன், ஊழியர்கள் மறியல் செய்தனர்.

நண்பகல் 12 மணி முதல் 12-30 மணிவரை இந்த மறியல் இயக்கம் இடம்பெற்றது. 5 தொழிற் சங்கங்களைச் சேர்ந்த சுமார் 200 ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கச்சேரிஊழியர்களுடன் கூட்டுறவு இலாகா, சுங்க இலாகா, கல்விஇலாகா ஊழியரும் கலந்துகொண்டனர்,

இன்று மறியல் இயக்கம் கல்விக்கந்தோருக்கு முன்பும், கச்சேரி வாசலிலும் ஏககாலத்தில் இடம்பெறுமென இயக்க அமைப்பாளர் திரு கே. சி. கனகரத்தினம் தெரிவித்தார்.

(அ)

---

## கலைஞருக்கு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைப் பகுத்தறிவு இயக்கத்தின் யாழ்ப்பாணக் கிளையினர் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கு தந்திமூலம் வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

ஃ ஃ ஃ

(மட்டக்களப்பு)

இந்தியாவில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழகத்தில் அமோக வெற்றி பெற்ற திராவிட முன்னேற்றக்கழகத்தின் தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கு மட்டுநகர் அண்ணாமன்றத்தினரும் பாராட்டு மடல் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

......

## பட்டம் ஏற்றும் போட்டி

(புலோலி)

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தின் 10 வது பட்டம் ஏற்றும் விழா தைப் பொங்கல் தினத்தன்று பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

(அ)

......

## மேலதிகமாவட்ட நீதவான்நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மேலதிக நீதிமன்றம், புதிய கட்டடத்தில்மேலதிகநீதவான் திரு. கே. எஸ், மகேசனால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலில். கொழும்புத்துறை ப. நோ. கூ. சங்க வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

யாழ். நீதவான் நீதிமன்றத்திற்கு அருகில் புதிதாக அமைக்கப்பட்ட மேலதிக நீதிமன்றத்தை ஆரம்பித்துவைத்த போது சட்டத்தரணிகள் கலந்துகொண்டனர்.

மேலதிக மாவட்ட நீதவானாக திரு. பி. பாலவடிவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலதிக மாவட்ட நீதிமன்றத்திற்கான புதிய கட்டடம், யாழ், மேல் நீதிமன்றத்திற்கு அருகில் அமையவிருக்கிறது. இதற்கான இடம் நேற்றுப் பார்வையிடப்பட்டது.

[க-அ]

## ராஜினமா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுகூலம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் அ. தி. மு. கழகத்துக்கு எதிராக வாக்களிக்கப்படவில்லை. இரண்டு தொகுதிகளில்தான்நாம் வெற்றிபெற்ற போதிலும் கடந்த தேர்தலை விட இம்முறை அதிக வாக்குகளைப் பெற்றுள்ளோம். இந்த லோக் சபை தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் அ. இ அ. தி. மு. க. அமைச்சரவை ராஜினமாச் செய்யவேண்டியதில்லை. எதிர்க்கட்சிகள் சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவந்து நிறைவேற்றினால் அதை ஏற்றுக் கொள்வோம் என்றார் திரு. ராமச்சந்திரன்.

மத்திய அரசுகளுக்கு முன்பு ஆதரவளித்ததுபோல் திருமதி காந்திக்கும் தமிழக அரசுஆதரவளிக்கும் என்றார் முதலமைச்சர்.

---

## இரு ஆசிரியர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் பொதுச்செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியமும் அவரது மைத்துனரும் ஆசிரியருமான சிறிஸ்கந்தராஜா (வயது 30) ஆகியோராவர்.

பலாலி வீதிவழியாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் யாழ்.தேவியும் மோதுண்டபோது சைக்கிளை செலுத்திவந்த திரு. சிறிஸ்கந்தராஜா ஸ்தலத்திலேயே மரணமானார். ந. பாலசுப்பிரமணியம் யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

வேலணையைச் சேர்ந்த இந்த இரண்டு ஆசிரியர்களில் ந. பாலசுப்பிரமணியம் கடந்த பத்து வருடங்களாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பணியாற்றியவர். பெரியபுலம் மெதடிஸ்த மிசன் பாடசாலை ஆசிரியரான இவர் ஒருசட்டத்தரணியுமாவார்.

ஸ்தலத்திலேயே பலியான திரு. சிறிஸ்கந்தராஜா சில மாதங்களுக்கு முன்னரே திருமணம் புரிந்தார்.

[வேலணை-கோண். நி. கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மக்களின் தீர்ப்பு:

# இந்திராவின் கட்சியே உண்மையான காங்கிரஸ்

## இருகட்சிகளும் இணையவேண்டும்" -பக்தவத்சலம்

(சென்னை)

"இந்திரா காங்கிரஸ்தான் உண்மையான காங்கிரஸ் என்று இத்தேர்தலில் மக்கள் தீர்ப்பளித்துவிட்டனர். இரண்டு காங்கிரஸ்களுமே உடனடியாக இணையவேண்டும்" என்று முன்னாள் முதலமைச்சரும் அர்ஸ் காங்கிரஸ் தலைவருமான திரு. எம். பக்தவத்சலம் நேற்று கருத்து வெளியிட்டார்.

தமிழ்நாடு அர்ஸ் காங்கிரஸின் மற்றுமொரு தலைவரான திருமதி டி.என். அனந்தநாயகி நேற்று கருத்து தெரிவிக்கையில், இரண்டு காங்கிரஸ்களும் ஒரே கொடியின் கீழ் இணைய வேண்டும் என்றும் இங்சந்தர்ப்பத்தை திருமதி இந்திரா காந்தி சரியாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## எம். ஜி. ஆரின் ஆலோசனையுடன் அர்ஸ் ராஜினுமா?

### தவருன செய்தி என்கிறது தமிழக அரசு

பெங்களூர், ஜன. 9

கர்நாடக முதல்வரும் காங்கிரஸ் தலைவருமான திரு. தேவராஜ் அர்ஸ் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் ஆலோசனையின் பேரிலேயே கர்நாடக முதல்வர் பதவியை ராஜினுமாக் செய்தார் என பெங்களூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் செய்தியை தமிழக அரசு மறுத்துள்ளது.

இச்செய்தி வேண்டுமென்றே தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனை அவமதிக்கும் நோக்குடன் திரித்துக் கூறப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறினர். (இ)

## தி. மு. க. இந்திராவுடன் கூட்டுச்சேராவிடின்...

### டாக்டர் சந்தோஷம் கருத்து

சென்னை, ஜன 9

இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேர்ந்திருக்காவிடின் தி.மு.க.வுக்கு தற்போது கிடைத்துள்ள ஓரளவு பிரகாசமான எதிர்காலம் கிடைத்திருக்காது.

இவ்வாறு ஜனதாகட்சியின் தமிழ்நாடு தலைவர் டாக்டர் சந்தோஷம் தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸுக்குக் கிடைத்துள்ள வியத்தகு வெற்றி ஒரு தெய்வீகத்தீர்ப்பு என்றும் டாக்டர் சந்தோஷம் கூறினர். (இ)

சஞ்சய் ஊழல் வழக்கு

## "சட்டத்தின் பணியில் அரசு தலையிடாது"

சென்னை, ஜன. 9

திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் திரு. சஞ்சய் காந்தி மீது ஜனதா அரசு சுமத்தியுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சட்டம் தனது பணியைச் செய்யும் அதில் அரசு தலையிடாது.

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. இளையபெருமாள் சென்னையில் நிருபர்களிடம் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

இந்திரா காங்கிரஸ் கட்சிக்குள் மேலும் அதிக ஒற்றுமை இருக்குமாயின் தமிழ்நாட்டில் அ.தி.மு.க.விடம் தோல்வியடைந்த சிவகாசி, கோவில்செட்டிபாளையம் ஆகிய இரு தொகுதிகளிலும் இந்திரா காங்கிரசுக்கு வெற்றி கிடைத்திருக்கும்.

எதிர்பார்த்ததைவிட இந்திரா காங்கிரசுக்கு மாபெரும் வெற்றி கிடைத்துள்ளது.

தமிழகத்தில் இந்திரா அலை பலமாக வீசியதாலும் முஸ்லிம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அளித்த உறுதிமொழிகளை எம், ஜி. ஆர். அரசு மீறியதாலுமே அ. தி, மு. க: படுதோல்வி அடைந்தது. (இ)

# இந்திரா வெற்றி: ரஷ்யா பாராட்டு

மாஸ்கோ, ஜன. 9

இந்திய லோகசபைத் தேர்தலில் திருமதி இந்திரா காந்தி மகத்தான வெற்றி பெற்று புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளளார்.

இவ்வாறு சோவியத் யூனியன் உத்தியோக பூர்வமாக திருமதி காந்தியைப் பாராட்டியுள்ளது.

சோவியத் யூனியனின் அதிகாரபூர்வமான பத்திரிகையான 'பிராவ்தா' உட்பட சகல ரஷ்யப் பத்திரிகைகளும் திருமதி காந்தியின் வெற்றியைப் பாராட்டி செய்திகளும் தலையங்கங்களும் எழுதி உள்ளன. (இ)

ஈரான் - அமெரிக்க நெருக்கடி

ஆப்கானில் ரஷ்ய தலையீடு

# டியாகோகாஸியாதீவு இராணுவ தளத்தை அமெரிக்கா அபிவிருத்தி செய்கிறது

வாஷிங்டன், ஜன 9

இந்துசமுத்திரத்தில் நிலை கொண்டுள்ள அமெரிக்க போர்க் கப்பல்களுக்கு உதவும் முகமாக இந்து சமுத்திரத் தீவான டியாகோகாஸியாவில் உள்ள அமெரிக்க தளங்களை அபிவிருத்தி செய்ய அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஈரான் அமெரிக்க உறவில் நெருக்கடி தோன்றியுள்ளதை அடுத்தும், அப்கானிஸ்தானில் சோவியத் யூனியன் படைகள் ஊடுருவல் செய்துவருவதனுல் ஏற்பட்டுள்ள பதட்டநிலையை அடுத்துமே அமெரிக்கா மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது.

பிரிட்டனுக்குச்சொந்தமான டியாகோ காஸியா தீவை பயன்படுத்துவது குறித்து 1966 ல் செய்துகொள்ளப்பட்ட அமெரிக்க பிரிட்டிஷ் ஒப்பந்தத்துக்கமையவே தீவில் உள்ள தளம் இப்போது அபிவிருத்தி செய்யப்பட இருக்கிறது.

இதற்காக 1981 ம் ஆண்டு அமெரிக்க பட்ஜட்டில் அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. (இ)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்கெம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்கெம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினுல் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்

25, பொஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.

தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !

உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும் ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும் உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

## நான் அமெரிக்க ஜனுதிபதியானுல்...?

### செனட்டர் கென்னடி கூறுகிருர்

வாஷிங்டன், ஜன. 9

"அமெரிக்காவின் ஜனுதிபதியாக நான் இருந்தால் சோவியத் யூனியனுக்கு தானியங்கள் ஏற்றுமதி செய்யதற்குத்தடைவிதிக்க மாட்டேன்"

இவ்வாறு அமெரிக்க செனட்டர் திரு. எட்வர்ட்கென்னடி தெரிவித்துள்ளார்,

திரு. ஜிம்மி கார்ட்டருடன் அமெரிக்க ஜனுதிபதி பதவிக்கான அபேட்சகர் பதவிக்கு போட்டியிடும் திரு. கென்னடி மேலும் கூறியதாவது:-

"இன்றைய சமாதான காலத்தில் ஏனைய நாடுகளுக்கு தானியங்களை ஏற்றுமதி செய்வதைத் தடை செய்வது சரியான நடவடிக்கை அல்ல, (இ)

## இந்திராவின் வெற்றி எதிர்பாராத ஓர் அதிசய நிகழ்ச்சி

### ஜெகஜீவன் கருத்து

புதுடில்லி, ஜன. 9

திருமதி இந்திரா காந்தியின் வெற்றி ஓர் எதிர்பாராத அதிசயநிகழ்ச்சி என்று ஜனதாக் கட்சித்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் நிருபர்களிடம் பேசுகையில் கூறினர்,

ராஞ்ய சபை எதிர்க்கட்சித் தலைவரும் இந்திரா காங்கிரஸ் சார்பில் வாரணுசியில்போட்டியிட்டு லோக்தள் செயல் தலைவர் திரு. ராஜ் நாராயணைத் தோற்கடித்தவருமான திரு. கமலபதி திருப்பாதி கருத்துத் தெரிவிக்கையில், திருமதி இந்திரா காந்தியின் வெற்றி ஜனநாயகத்திற்குக் கிடைத்த வெற்றியாகும் என்று கூறினுர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100வது வெற்றித் திருநாளை நோக்கி ஓடுகிறது!

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி, சுஜாதா, சந்திரமோகன், கவிதா நடித்த

அந்தமான் காதலி

(வர்ணப்படம்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)

தினசரி: 10.30, பி.ப. 2.30, 6.00, 9.30

சிவாஜி, ஜெயலலிதா ஜி.வரலட்சுமி நடித்த

தாய்

(புத்தம்புதிய பிரதி)

100-வது வெற்றித்திருநாளை நோக்கி

சாந்தி (யாழ்நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

போன்: 7642

ஜெய்சங்கர் ஸ்ரீதேவி எம்.ஆர்.ராதா அசோகன் ஸ்ரீகாந்த் மனோரமா சுருளி நடித்த

டாக்ஸி டிரைவர்

வண்ணத்திரையோவியம்

A Hilarious Action Comedy Film For All Ages

RANEE (JAFFNA) Daily at: 10-30, 2-15, 4-15, 7-15 & 9-45 p.m.

Terrence Hill Bud Spencer Team up As A Pair Of Miami Beach Combers Donning The Police Unigorm Go About Busting Cars And Crooks In Warner Brothers Presentation

CRIME BUSTERS

100-வதுவெற்றித்திருநாளைநோக்கி

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி காலை 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45

சிவாஜிகணேசன்-சுஜாதா நடித்த

தீபம்

(வெள்ளிவிழாச் சித்திரம்)

(வர்ணக்கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி, விஜயா, மனோரமா, தேங்காய் சீனிவாசன் நடிக்கும்

4-வது ஜனத்திரள் வாரம்

ஜெனரல் சக்கரவர்த்தி

(ஈஸ்ட்மன் கலர்) டைரக்‌ஷன்: யோகானந்த்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் சனி, ஞாயிறு 4 காட்சிகள்

சிவாஜி சௌகார் நடித்த பார் மகளே பார்

நாளை முதல் எங்கள் தங்க ராஜா

லிடோ (யாழ்.நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-30 போன்: 7693

வெள்ளிக்கிழமை விரதம்

REGAL (Jaffna) Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 P.m.

Your last chance to re-live the greatest moments of movie musical magic...

That's Entertainment Part-2

From 10th SKY RIDERS

# இன்றைய பலன்

மார்கழி மாதம் 26-ம்திகதி
வியாழக்கிழமை
10-1-1980

மேடம்: மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும். தொல்லைகளால் பாதிப்படைவீர்கள். பிரயாணத்தை நிறுத்தவும். இறை நம்பிக்கை நன்று.

இடபம்: பொதுப்பணியின் மூலம் புகழுக்கு இடமுண்டு. தொழில் புரியும் இடத்தில் திருப்தி நிலவும் பிதாவழித் தனமும் சேரும்.

மிதுனம்: இடப்பிரிவுக்கான யோசனை உருவாகலாம். புத்திரர் வழியாலும் புதினம் உண்டு. வாழ்க்கையும் வளம் பெறும்.

கடகம்: உடல்நலத்தில் அபிவிருத்தி கிடைக்கும். இதயச்சுமை அகலும். வாழ்க்கையிலும் திடீர்வரவுண்டு.

சிங்கம்: வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வெளியிடத்துப் பயணம் வேதனைதரலாம். பெரியோரை பகைத்துக் கொள்ளாது பொறுமையைப் பேணவும்.

கன்னி: கரும்புபோல் நினைத்தவையெல்லாம் வேம்பாக நினைக்கக்கூடும். அதிகமுயற்சி எடுத்தாலும் அற்பலாபமே. அபிப்பிராய பேதங்களை நிறுத்திக்கொள்ளவும்.

துலாம்: காதலில் வெற்றியுண்டு. எதிர்பார்த்தகாரியம் சித்திபெறும். நுட்பமான வேலைகளில் ஈடுபடுவோர் போற்றப்படுவர்.

விருச்சிகம்: குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உண்டு பண்ணும். நெடும் பயணம் வேண்டாம். அதிகசிந்தனையை தவிர்த்துக்கொள்ளவும்.

தனுசு: ஒளிபரப்பும் வாழ்க்கை உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். நீண்டநாள் கடன் இன்று நிவர்த்தியாகும்.

மகரம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திரசுகத்துடன் தொழிலும் சீர்பெறும்.

கும்பம்: நண்பர்களே காலை வாரிவிடக்கூடும் எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படும். அரச பயமும் உண்டு. அடக்கமே நன்று.

மீனம்: குடும்பத்தில்அமைதியான சூழ்நிலை தென்படும். நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாகலாம். களஸ்திர சுகமும் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க.வேலுப்பிள்ளை

## 'மைலா கைது:

(வத்துகாமம்)

கடந்த பல மாதங்களாக தெல்தெனிய, மத்துகாமம் கலேவது ஆகிய இடங்களில் கொள்ளைகளில் ஈடுபட்டவரும் கலேவது பொலிஸ் நிலைய கான்ஸ்டபிள் வெலகெதர என்பவரைக் கத்தியால் குத்தி கொலை செய்தவருமெனச் சந்தேகப்படும் பிரபல கேடியான 'மைலா' என்ற ரம்பண்டாவை கந்தேவத்த ·ாட்டுப்பகுதியில் வைத்து பொலிசார் கைது செய்தனர்.

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி: 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
உழைக்கும் கரங்கள்

# சென்மதி நிலுவை

(நேற்றையதொடர்ச்சி)

78-ம் ஆண்டின் சென்மதி நிலுவை அமைப்பு 1977-ம் ஆண்டின் செலாவணி வர்த்தக சிரமைடபுக்களைத் தொடர்ந்து இறக்குமதிகளிலேற்பட்ட பெருமளவு அதிகரிப்பின் காரணமாக வர்த்தகக் குறையொன்றைக் கொண்டு விளங்கியது. இதன் விளைவாக நடைமுறைக் கணக்கு முன்னைய ஆண்டின் மிகைக்கு எதிராக ரூ.10,320 இலட்சம் கொண்ட (சிஎஉ 750 இலட்சம்) குறையைப் பதிவு செய்தது. நீண்ட தவணை மூலத்தின் தேறிய வரவுகள் நடைமுறைக் கணக்குக் குறையை நிதியீட்டப் போதியதாக இருந்ததனால் தொடர்ந்தும் மூன்றாவது ஆண்டாக 1978 ல் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்து 1979 க்காகத் திட்டமிடப்பட்ட நான்கு மாத இறக்குமதிகளுக்கு நிதியிடுவதற்குப் போதுமான மட்டத்தில் இருந்தன.

(பக்கம் 258-260)

செலாவணி வர்த்தக முறைகள் தாராளமாக்கப்பட்டமையினால் இறக்குமதிகளில்

### 1978ம் வருடத்திய மத்தியவங்கியின் பொருளாதார மீளாய்வு

ஏற்பட்ட அதிகரிப்பே 1978 இன் சென்மதி நிலுவை அமைப்பில் காணப்பட்ட சிறப்பான பண்பாகும். சி. எ. உ. வில் இறக்குமதிக் கொடுப்பனவுகளின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 62,900 இலட்சத்திலிருந்து (சி.எ.உ. 6,220 இலட்சம்) 32 சதவீதத்தால் அதிகரித்து. ரூ.156000 இலட்சமாக (சி.எ.உ. 8,190 இலட்சம்) விளங்கியது. இவ்வதிகரிப்புக்கு முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட இரண்டு மடங்குக்குக் கூடுதலான அதிகரிப்பே பெரிதும் காரணமாகும்.

நுகர்வுப்பொருட்கள் மீதான கொடுப்பனவுகள் முறையே 10 சதவீதத்தாலும் 6 சதவீதத்தாலும் அதிகரித்தன.

(பக்கம் 260)

இறக்குமதிகளிலேற்பட்ட விரைவான அதிகரிப்பிற்கு ஏற்றுமதி வருவாய்களால் ஈடுகொடுக்க முடியவில்லை: ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்கள் (சிஎஉ நியதிகளில்) 1977 இன் ரூ. 66,400 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 6,600 இலட்சம்) 1978 இல் ரூ. 132, 070 இலட்சமாக 2 சதவீதத்தால் மட்டும் அதிகரித்தது. பெருந்தோட்டத்துறையின் தேங்கிய நிலைமையே ஏற்றுமதிகளில் நிலவிய மந்த நிலைக்குப் பெரிதும் காரணமாகும்.

(பக்கம் 260)

முன்னைய ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்த பணிகள் கணக்கின் மிகை 1978 - ல் ரூ.1190 இலட்சத்திற்கு (சி எ உ 60 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு தாராளமாக்கலின் பின் வெளிநாட்டுப் பயணங்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்தமையும் துறைமுகம் போக்குவரத்து காப்புறுதி ஆகியவற்றில் கிடைக்கப்பெற்ற குறைவான மிகையுமே காரணமாகும். (பக்கம் 260)

வெளிநாட்டில் குறிப்பாக மத்திய கிழக்கில் தொழில் புரியும் இலங்கையரினால் செய்யப்பட்ட உள்பண அனுப்பல்களின் காரணமாக தேறிய அளிப்பட்ட மாற்றல்கள் 42 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக்காட்டின. தனிப்பட்ட அலுவல் சார் மாற்றல்களின் தேறிய தொகை 1978-ல் ரூ.12,420 இலட்சமாக (சிஎஉ 630 இலட்சம்) அதிகரித்தது.

(பக்கம் 261)

பணிகள் மாற்றல்கள் ஆகியவற்றின் மிகை வர்த்தகக் குறையை ஈடுசெய்யப் போதாதிருந்ததன் காரணமாக நடைமுறைக்கணக்கு முன்னைய ஆண்டின் ரூ. 12,660 இலட்ச (சிஎஉ 1250 இலட்சம்) மிகையுடனொப்பிடுமிடத்து ரூ. 10,320 இலட்சம் கொண்ட (சிஎஉ 750 இலட்சம்) குறையக்காட்டியது.

(பக்கம் 261)

1978-ல் வெளிநாட்டுச் செலாவணியில் காணப்பட்ட இடைவெளி 1977 இன் ரூ. 8,600 இலட்சத்திலிருந்து (சிஎஉ 780 இலட்சம்) ரூ.40, 480 இலட்சமாக (சிஎஉ 2300 இலட்சம்) விரிவடைந்தது. இவ்விடைவெளியின் பெரும் பகுதி செயற்றிட்ட பண்ட உணவு உதவி ஆகியவற்றை உள்ளடக்கிய நீண்டதவணைக் கடன்களினால் நிதியீட்டப்பட்டது. பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து. (ப.நா.நி) முறையே ரூ. 7, 560 இலட்சம் (சிஎஉ 380 இலட்சம்) ரூ. 7780 இலட்சம் (சிஎஉ 400 இலட்சம்) கொண்ட எடுப்பனவுகள் துணைநில் பொறுப்பான்மை நிதிய ஒழுங்குகளின் கீழும் பெறப்பட்டன. (பக்கம் 261)

மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 21 சதவீதத்தால் ரூ. 74, 770 இலட்சமாக (சிஎஉ 3,710 இலட்சம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்பு நீண்டதவணை மூலதனங்களின் உயர்வரவுகளினாலும் ப. நா. நிதியத்திலிருந்து செய்யப்பட்ட எடுப்பனவுகளினாலும் ஏற்பட்டது.

(நாளை தொடரும்)

......

## 60 பேர் கட்டுப்பணம் இழந்தனர்

யுதுச்சேரி, ஜன,9

புதுச்சேரி சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட 132 பேரில் 60 வேட்பாளர்கள் தமது கட்டுப்பணம் இழந்தனர். இவர்களில் 43 பேர் சுயேச்சை வேட்பாளர்கள்.

[ஓ]

......

## சபாநாயகர் வெளிநாடு விஜயம்

(கொழும்பு)

சபாநாயகர் திரு. எம். ஏ. பாக்கீர் மாக்கார் சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கு பத்தொன்பது நாள் விஜயத்தை மேற்கொண்டு புறப்பட்டுள்ளார். திருமதி பாக்கீர் மாக்கார், பாராளுமன்ற உதவிக் காரியதரிசி திழி. எவ். என். செனிவிரத்ன ஆகியோரும் இவருடன் கூடச்சென்றுள்ளனர். சபாநாயகர் இம்மாதம் 29ம் திகதி நாடுதிரும்புவார். (வெ)

......

## சீமெந்து

(கொழும்பு)

சீமெந்திற்கு இப்பொழுது பெருமளவு தேவை ஏற்பட்டுள்ளது.

மருதானையிலுள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் மக்கள் பெருந்தொகையாக 'கியூ'வில் நின்று சீமெந்தைப் பெற்றுவருவதாக அக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வெ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவில் வந்துள்ளன
உடனே வாங்கலாம்
FALCON SCOOTERS
● மிகவும் சொகுசானது
● அதிக கவர்ச்சி மிக்கது
● எல்லோரும் விரும்புவது
பல்க்கன் ஸ்கூட்டர்கள்
பல்க்கன் ஏஜென்சி,
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
போன்: 685

ஈழநாடு The EELANAADU 50 சதம்

வெளிவந்துவிட்டன
வினாவிடைகள் A/L1980 ஏப்பிரல்
பொருளாதாரம்
T. லோகநாதன் B. A.
இந்து நாகரிகம்
M. S. ஐயர் M. A.
அளவையியல்
R. நவரட்ணம் B. A.
கிடைக்குமிடங்கள்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
பூபாலசிங்கம் புத்தகசாலை
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
V. P. P. மூலமும்
பெற்றுக்கொள்ளலாம்.

## முரசொலி மாறன் தலைவர்!

(புதுடில்லி)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாராளுமன்றக்குழுவின் தலைவராக ராஜ்யசபை உறுப்பினர் திரு. முரசொலி மாறன் ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

லோக்சபா உறுப்பினர் திரு. ஜி. லட்சுமணன் லோக்சபாவில் கட்சியின் அவைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. மாயத்தேவர் கட்சியின் கொரடாவாக இருப்பார்.

# எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றாக இணையவேண்டும்

## காங்கிரஸ் தலைவர் விருப்பம்

(புதுடில்லி)

இந்திய லோகசபையின் எதிர்க்கட்சிகள் அனைத்தும் தத்தமது கருத்து வேறுபாடுகளை மறந்து சபையின் ஒரே அமைப்பாக இணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. தேவராஜ் அர்ஸ் தெரிவித்துள்ளார்.

இன்றைய சூழ்நிலையில் எந்த ஒரு அரசியல் கட்சியுமே எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கக்கூடிய தகுதியைப் பெறும் எனத் தாம் எண்ணவில்லையென்றும் திரு, அர்ஸ் கூறினார். (இ)

## சஞ்சய்க்கு அரசில் பதவி கிடையாது!

(புதுடில்லி)

பிரச்னைக்குரியவரும் தமது மகனுமான சஞ்சய் காந்திக்கு மத்திய அரசில் பதவி எதுவும் வழங்கப்படமாட்டாது என்று திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார். (இ)

## தமிழ்-சிங்களமொழிபெயர்ப்பு சிறுகதை நூல்கள் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

சிங்களச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புக்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சேதுபந்தனம் என்றதலைப்பில் தொகுதியாக்கப்பட்டுள்ளது. இதேவேளை தமிழ்ச் சிறுகதைகளும் சிங்களத்தில் பெயர்க்கப்பட்டு நூலுருவில் வெளி வந்துள்ளது.

இவ்விரு நூற்தொகுதிகளும் இம்மாதம் 13-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் அறிமுகஞ் செய்யப்படவுள்ளன. முத்தமிழ் வெளியீட்டுக் கழகமும் மக்கள் கலை இலக்கியப்பேரவையும் இணைந்து நடத்தும் இவ்வறிமுகவிழா ஞாயிறன்று பிற்பகல் 5-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும்.

சிங்களச் சிறுகதைகளின் மொழி பெயர்ப்பான 'சேது பந்தனம்' என்ற நூலின் ஆய்வுரையை திரு. ஆ. சிவநேசச் செல்வனும், தமிழ்ச் சிறுகதைகளின் மொழிபெயர்ப்புநூலின் ஆய்வுரையை யாழ். கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த சிங்கள வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஏ. ஆரியதாச ஆகியோர் நிகழ்த்துவர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி மயிலங்கூடலூரர் பி. நடராசர் ஜனாப் எம். ஏ. நுஃமான், சிங்கள மகாவித்தியாலய அதிபர் திரு. என். ஆர். சி. குணவர்த்தன, திரு. கே. தங்கவடிவேல் ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்கள்.

இரு நூல்களதும் மொழி பெயர்ப்பாசிரியர் திரு. த. கனகரத்தினம் 'சிங்கள தமிழ் இலக்கியப் பரிவர்த்தனை ஓர் ஆய்வுநோக்கு' என்பதுகுறித்து உரை நிகத்துவார்.

மக்கள் கலை இலக்கியப் பேரவை பொதுச் செயலாளர் திரு. கே. டானியல் நன்றியுரை கூறுவார். [அ]

## மறியல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறார்கள். இவர்களுக்கு பொலிஸ்பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. பொலிசார் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார்கள்.

### பத்திரிகை ஆசிரியர்

பார்வையாளர்களாக சென்றிருந்த ஜனதின பத்திரிகை ஆசிரியர் சரத் நாவன்ன, தினமின ஆசிரியர் ஹென்றி வீரசிங்க ஆகியவர்களும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இலங்கை வங்கி தொழிற் சங்கத் தலைவர் திரு. நிமால் பெரேராவும் தாக்கப்பட்டுள்ளார்.

குண்டர்கள் 31 ஸ்ரீ 16 இலக்க ஜீப் ஒன்றிலேயே ஸ்தலத்துக்கு வந்துள்ளனர்.

மறியல் செய்பவரை இந்த அரசு தடைசெய்துள்ளதாஎன்பதை அறியவிரும்புகின்றேன். நாளையதினம் இதைவிடமோசமான நிலைமை ஏற்படப் போகின்றது.

கொழும்பு மத்திய தொகுதி மூன்றாவது எம். பி. திரு. ஹலிம் இஸாக் பேசுகையில் இந்த அரசாங்கத்தை மிக விரைவில் மக்கள் தூக்கி எறிவார்கள். இந்தியாவிலும் இந்தநிலைதான் ஏற்பட்டுள்ளது.

இந்த சபையின் முன்னாள் உறுப்பினரான திரு. வாசுதேவ நாணயக்காரா மூன்று மணி நேரம் பொலிஸ் லாக்கப்பில் வைக்கப்பட்டிருந்திருக்கிறார். இங்குள்ள சிலர் மறியல் இயக்கத்தையும் போராட்டத்தையும் பகிடியாக நினைக்கிறார்கள். சட்டத்துக்குட்பட்டு மறியல்செய்வதற்கு உரிமையுண்டென்றார்.

உறுப்பினர்கள் தெரிவித்த இக்கருத்துக்களை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்துக்குச் கொண்டுவருவதாக சபைக்குத் தலைமை வகித்த பிரதி சபாநாயகர் திரு. நோமன் வைத்தியரத்ன தெரிவித்தார். (ம)

## வெள்ளி விழா கொண்டாடுவர்

(உடுப்பிட்டி)

கரவெட்டியைச் சேர்ந்த அருட். செல்வி மேரி பெடலினா தமது துறவற வாழ்வின் 25 வருட வெள்ளி விழாவை இம் மாதம் 12 ம் திகதி கரவெட்டியில் கொண்டாடுகின்றார்.

அன்றையதினம் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேட திருப்பலிப்பூசையும் ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வெள்ளி விழாவை முன்னிட்டு அருட் செல்வி. மேரி பெடலினாவுக்கு 12 ம் திகதி மாலை கரவெட்டிக் கத்தோலிக்க இளைஞர் மன்றத்தால் தேநீர் விருந்துபசாரம் ஒன்றும் அளிக்கப்படவுள்ளது. (அ)

## அதிமுக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குநிலை சீர்குலைந்துள்ளதென்றும் இதனால் மக்கள் அ. இ. அ. தி. மு. கழக ஆட்சியில் சலிப்படைந்திருக்கிறார்கள் என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

ஏப்ரல் மாதம் தமிழ்நாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் -தி. மு. கழகக் கூட்டணி நீடிக்கும் என்றும் திரு. கருணாநிதிகூறினார்.

## இடமாற்றம்பெற்ற இந்த ஊழியர்கள்: அரசாங்கஅதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காணிப்பதிவு கந்தோருக்கு இடமாற்றம் பெற்றுவந்த 5 ஊழியர்கள், நேற்றுமுன்தினம் இடமாற்ற உத்தரவு மேலிடத்தினால் ரத்துக் செய்யப்பட்டதனால் வெளியேற்றப்பட்டனர். கமநல சேவை காரியாலயத்திலும் 2 ஊழியர் இதேபோன்று வெளியேற்றப்பட்டனர்.

அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ். கிளை செயலாளர் திரு. கே. சி. கனகரெத்தினம் பாதிக்கப்பட்ட ஊழியர் சார்பில் அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசாமியை நேற்று முன்தினம் மாலை சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறினார்-

அரசாங்க அதிபர் வெளியேற்றப்பட்ட ஊழியரைமீண்டும் அந்தந்த காரியாலயங்களில் அனுமதிக்க உடன்நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

நேற்று வெளியேற்றப்பட்ட ஊழியர்கள், காணிப்பதிவு கந்தோரிலும், கமநலசேவை காரியாலயத்திலும் மீண்டும் அனுமதிக்கப்பட்டனர். வழக்கம் போல வரவு புத்தகத்தில் கையெழுத்திட்டனர்.

யாழ். கல்வி கந்தோரில் பாதிக்கப்பட்ட 16 ஊழியர்களும் தொடர்ந்து ஆலோசனை மண்டபத்தில்இருந்துவருகிறார்கள். நேற்றுவரை பாதிக்கப்பட்ட ஊழியர் தொடர்பாக எவ்வித புதிய அறிவித்தலும் கிடைக்கவில்லை. (க)

## இடமாற்றம்

(நயினாதீவு)

கிளிநொச்சிக்காணி அலுவலகத்தைச் சேர்ந்த வெளிக்களப்போதனாசிரியர் திரு. சு. கரராஜசேகரம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (நா)

## கைதடி ப. நோ. கூ. ச. சுயேட்சைக் குழு கைப்பற்றியது!

(யாழ்ப்பாணம்)

கைதடியிலுள்ள தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தை சுயேட்சைக்குழு கைப்பற்றியது.

சங்கத் தலைவராக சுயேட்சைக்குழுவைச் சேர்ந்த திரு. எஸ். கணேசனும், உபதலைவராக சுயேட்சைக் குழுவைச் சேர்ந்த திரு. வி. இராசநாயகமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

7 பேரைக்கொண்ட சங்க நெறியாளர் குழுவில் நான்கு பேர் சுயேட்சைக் குழுவைச் சேர்ந்தவர்களாவர். நெறியாளர்குழு தேர்தல் நடந்து கடந்த ஒருமாதகாலமாக தலைவர் தெரிவில் தாமதம் ஏற்பட்டது. கடைசியில் கடந்த சனிக்கிழமை தலைவர், உபதலைவர் தெரிவு நடைபெற்றது. (க)

(புதுடில்லி)

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப்பெற்ற தேர்தல் முடிவுகள் வருமாறு:

## வெளியான முடிவுகள்:521

| | |
|---|---|
| இந்திராகாங்கிரஸ் | 349 |
| ஜனதா | 31 |
| தி. மு. க. | 16 |
| லோக்தள் | 40 |
| அர்ஸ் காங்கிரஸ் | 13 |
| இடது கம்யூனிஸ்ட் | 37 |
| வலதுகம்யூனிஸ்ட் | 11 |
| அ. இ. அ. தி. மு. க. | 02 |
| முஸ்லிம் லீக் | 03 |
| இதர கட்சிகள் | 16 |
| சுயேச்சை | 03 |
| இதுவரை வெளியான மொத்த முடிவுகள் | 521 |

## மரண அறிவித்தல்

### அமரர் ந. பாலசுப்பிரமணியம்

வேலணை கிழக்கு வாசியும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயல்வீரனும், முன்னாள் பொதுச் செயலாளரும், எனது குடும்ப நண்பனுமாகிய ந. பாலசுப்பிரமணியம் நேற்று (9-1-80) மாலை அகால மரணம் அடைந்து எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி அமரராகி விட்டார்.

அ. பொன்னம்பலம்
ஆசிரியரும், முன்னாள் நிருவாகச் செயலாளரும், இ. த. ஆ. ச.

4623

## 63 பேருக்கு தூக்குத்தண்டனை!

ஜெட்டா, ஜன. 9

கடந்த நவம்பர் மாதம் மெக்கா பெரிய பள்ளிவாசலில் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக இன்று சவூதி அரேபியாவில் 63 பேர் தூக்கிலிடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் ஜனவரி மாதம் 10-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No GE/8948/78 The Eelanaadu P. B. No.49, Tlegram Eelanadu. Phone 389

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org